1970 நவம்பர் 26]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *(அ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 18-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி முடிய கானகம், தரமணி மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் புழுங்கல் அரிசி வினியோகிக்கப்படவில்லை என்றாலும், அங்கிருந்த குடும்பக் கார்டு கடைகளுக்குப் பச்சரிசி வழங்கப்பட்டது. அதனால் புழுங்கல் அரிசி வழங்காததால் ஏற்பட்ட கஷ்டம் குறைக்கப்பட்டது.*

(இ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் புழுங்கல் அரிசி இருப்பு போதுமானதாக இல்லை. செங்கை மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர் குறுவை நெல்லிலிருந்து புழுங்கலரிசி தயாரிக்கவும், சார்புப் பகுதிகளில் விநியோகிக்கவும் ஏற்பாடு செய்தார்.

DR. H. V. HANDE : Is it not a fact that in these areas, boiled rice which has become spoiled due to wrong method of storage, was supplied? If so, will this Government tell us what is the quantity of boiled rice that was spoiled during one year because of such storage?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *தலைவரவர்களே, அந்தப் பகுதிகளில் நாம் ஏதோ கெட்டுவிட்ட அரிசியைத் தந்து விட்டதாக சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுத்ததாகத் தகவல் இல்லை. எவ்வளவு அரிசி கெட்டு விட்டது என்று கேட்கிறார்கள். அரிசி கெடுகிற தருவாயில் இருந்ததை எல்லாம் ஏலம் போட்டு விற்றுவிட்டது. கையில் கெட்டு விட்ட அரிசி எதுவும் இல்லை. மொத்தம் எவ்வளவு அரிசி கெட்டு விடும் தருவாயில் இருந்தது, எவ்வளவு ஏலம் போட்டோம் என்ற விவரம் கைவசம் இல்லை. கெட்டு விட்ட அரிசியை எங்கும் போடவில்லை. கெடுகிற தருவாயில் இருந்ததை எல்லாம் ஏலம் போட்டு விற்று விட்டோம்.* மு.ப. 9-30

Chingleput Municipality

* 9. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Local Administration be pleased to state—

(*a*) whether the Chingleput Municipal Council has requested the Government in 1970 to upgrade it; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *(அ) ஆம்.*

(இ) செங்கற்பட்டு நகராட்சித் தலைவர் அந்நகராட்சியை இரண்டாம் நிலை நகராட்சியாக மறுவகைப்பாடு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை நகராட்சி மன்றத்திற்கு அளித்தார். 31—3—1970 நாளிட்ட தனது 496-ஆம் எண் தீர்மானத்தில் அந்நகராட்சி மன்றம் இக்கருத்துரையை ஏற்று அது குறித்து அரசுக்கு எழுதுவதெனவும், தீர்மானத்தின் படிகளை பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்புவதெனவும் அது தீர்மானித்தது. நகராட்சியின் நிதிநிலை குறித்து விவரங்களை

அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்கப்பட்டுள்ளார். அந்த விவரங்கள் கிடைத்தவுடன் இச்செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, தமிழகத்திலே நகராட்சிகளாக உயர்த்தப்படவேண்டிய அளவிற்குப் பல ஊராட்சிகள் இருக்கின்றன. அவற்றை உயர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காலம் வரும்போது உயர்த்தப்படும். நகராட்சிகளை எல்லாம் உயர்த்துவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள் அனுசரிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

விசைத்தறிகள்

*** 10 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விசைத்தறி வாங்க நெசவாளர்களுக்குத் தற்போது என்ன என்ன உதவிகள் எந்த நிறுவனங்கள் மூலமாகத் தரப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில்களுக்கு அரசாங்க உதவிச் சட்டம் மூலமாகவும், வாணிக வங்கிகளின் மூலமாகவும், விசைத்தறிகளை வாங்க, தனிப்பட்ட நெசவாளர்களுக்கு வழி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு விசைத்தறிகள் வாங்குவதற்கு அரசு கடனுதவி செய்கின்றது.

கைத்தறி நெசவாளர்கள்

*** 11 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி புகுத்தப்படுவதால் வேலை இழக்கும் கைத்தறித் தொழிலாளர்கள் நிவாரணத்திற்கெனத் திட்டம் ஏதும் வகுக்கும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா ?

(இ) நெசவு ஆலைகள் மற்றும் நூற்பாலைகளுக்குக் கைத்தறி நெசவாளர் குடும்பத்தினருக்கு முதற் சலுகை காட்டி வேலையளிக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். விசைத்தறிகள் புகுத்தப்படுவதால் துயருறும் தொழிலாளர்களின் துயர் தணிப்புக்காகப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) கைத்தறித் துணிகளில் பலவகைகளை உருவாக்குவதில் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்களை அமைத்தல் ;